எனது இல: MOJ/E15/பொது நடவடிக்கைகள்

சுற்றறிக்கை இல: 13/2018

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு,

கொழும்பு 12.

2018.09.07

சகல திடீர் மரண விசாரணையாளர்களுக்கும்,

<u>பிரசவ மரணங்களைப் பிரேத பரிசோதனைக்காக ஆற்றுப்படுத்தல்</u>

01. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சுற்றறிக்கை 01/2014 மூலம் தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆலோசனைகள் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுவதுடன், அனைத்து பிரசவ மரணங்களும் பிரேத பரிசோதனைக்கு ஆற்றுப்படுத்தல் கட்டாயமானதாகும்.

02. பிரசவ மரணங்கள் சம்பந்தமாக குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளரினால் (பிரசவ மற்றும் சிறுவர் சுகாதாரம்) எனக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள FHB/EH/49/2016 மற்றும் 2018.05.28 ஆம் திகதிய கடிதத்தின்படி பின்வரும் கர்ப்பிணி மரணங்கள் பிரசவ மரணங்களென அழைக்கப்படும்.

2.1. கர்ப்பிணிக் காலத்திற்குள் ஏற்படும் மரணங்கள்.

2.1.1. கருத்தரித்த நாளிலிருந்து பிரசவம் வரையிலான மரணங்கள்

- இங்கே கர்ப்ப காலத்தை (கர்ப்பத்திற்கு எவ்வளவு காலம் என்பது) கவனியாது கர்ப்பிணிக்காலத்தினுள் ஏற்படுகின்ற அனைத்து மரணங்களும் பிரசவ மரணங்களாக் கருதப்படுகிறது. அவ்வாறே கரு உடலின் எந்தவொரு இடத்தில் அமைந்தாலும் அந்த சகல கர்ப்பிணி மரணங்களும் பிரசவ மரணங்களாகும். (சில கருக்கள் கருப்பையின் வெளியே வளரும்)

2.2. கர்ப்பிணித் தன்மை முடிவடைந்த பின்னர் ஏற்படுகின்ற மரணங்கள்

- கர்பிணித் தன்மை முடிவடைந்த நாளிலிருந்து மேலும் 42 நாட்கள் செல்லும் வரையில் ஏற்படுகின்ற மரணங்களும் பிரசவ மரணங்களாகும். (கர்ப்பிணித் தன்மையை முடிவுறுத்துதல் - பிரசவத்தின் போது, கருச்சிதைவின் போது, அறுவைச் சிகிச்சையின் போது, அல்லது வேறு விதமாக கருவை அல்லது கருமுளையை வெளியே எடுத்தல் கர்ப்பிணித் தன்மையை முடிவுறுத்தல் எனக் கருதப்படும்.)

2.3. கர்ப்பிணித் தன்மையை அல்லது கர்ப்பிணித்தன்மை தொடர்பான பிற காரணமொன்றினால் அல்லது அக் கர்ப்பிணித் தன்மையினால் தற்போதுள்ள நோயொன்று உச்ச நிலைக்குட்பட்டால் ஏற்படுகின்ற பிரசவ மரணங்கள்:-

உ+தா: இருதயநோய், டெங்கு, நியூமோனியா

2.4. தாமத பிரசவ மரணங்கள்:- சில கர்ப்பிணித் தாய்மார்கள் கர்ப்பிணித் தன்மை தொடர்பான காரணமொன்றினால் மேற்படி விவரணத்தின்படி கர்ப்பிணிக் காலம் முடிவடைந்து 42 நாட்களுக்கு பின்னரும் மரணிக்க முடியும் அவ்வாறான கர்ப்பக்காலம் முடிவடைந்து 90 நாட்களுக்குள் ஏற்படுகின்ற மரணங்கள் தாமத பிரசவ மரணங்களாகக் கருதப்படுகிறது.

03. பிரேத பரிசோதனைகள் - பிரசவ மரணங்கள் மற்றும் தாமத மரனங்கள் ஆகிய இரண்டுக்காகவும் செய்யப்படுதல் வேண்டும். எனவே கர்ப்பிணிக் காலத்திற்குள் அல்லது கர்ப்பிணித் தன்மை முடிவுற்று 90 நாட்களுக்குள் நிகழ்கின்ற அனைத்து கர்பிணி மரணங்களுக்காகவும் பிரேத பரிசோதனை செய்யப்படுதல் அத்தியவசியமானதாகும்.

04. கட்டில் தலைமாட்டு அட்டை அல்லது பிணியாய் அறிக்கைகளில் மரணத்திற்கான காரணம் காட்டப்பட்டிருத்தல், பிரேத பரிசோதனையொன்று செய்யாமைக்கான காரணமொன்றல்ல, பிரசவ மரணத்திற்கு காரணமான நோய் நிலைமையை மருத்துவர்களினால் நிர்ணயித்து இருப்பினும், மேற்குறிப்பிடப்பட்ட கர்ப்பிணி மரணங்களுக்காக பிரேத பரிசோதனை கட்டாயமாக செய்யப்படுதல் வேண்டும்.

05. பிரசவ மரணங்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் நோக்கம் மரணத்திற்கான காரணத்தை தேடிக் கொள்வது மாத்திரமல்ல என்பதுடன் அதன் மூலம் எதிர்காலத்தில் பிரசவ மரணங்களை தடுத்துக் கொள்வதற்கான பாரியதொரு பங்கேற்பு கிடைக்கிறது. அது இந்நாட்டு சுகாதார துறையின் முன்னேற்றத்துக்காக பேருதவியாக இருக்கும் என்பதால் மேற்படி விடயங்களுக்கு தங்களது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

டபிள்யூ.எம்.எம்.ஆர். அதிகாரி

செயலாளர்,

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

பிரதிகள்:-

01. செயலாளர் - சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு
02. பணிப்பாளர் - குடும்ப சுகாதார பணியகம்
03. பிரதான சட்ட மருத்துவ அலுவலர், சட்டமருத்துவ அலுவலகம் கொழும்பு